


விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், செஞ்சி தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் வி.சி.மோட்டூர் பைபாஸ் சாலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சிலையை நிறுவ கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் – மாவட்டச் செயலாளர் ஆர்.காந்திஅடிக்கல் நாட்டினார். உடன் சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, துணை செயலாளர் துரைமஸ்தான் மற்றும் ஒன்றிய, நகர ,பேரூர் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விலை ஏற்ற இறக்கம் எதிரொலி:

# பருத்தி விவசாயிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச.4-

உலகளாவிய பருத்தி விலை ஏற்ற இறக்கங்களால் பருத்தி விவசாயிகள் மற்றும் ஜவுளித்துறையை பாதுகாக்க எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகள் வருமாறு:

உலகளாவிய பருத்தி ஏற்ற இறக்கமான விலைகளால் ஜவுளித் துறைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், பருத்தி விலையை நிலையாக வைத்திருக்கவும் ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளதா;

அப்படியானால், இந்திய பருத்தி கழகம் (CCI) மற்றும் ஜவுளி அமைச்சகம் இது தொடர்பாக எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

உள்நாட்டு பருத்தி தேவைகள் நிறைவேற்றப்பட்ட பின்னரே வணிகர்கள் பருத்தியை ஏற்றுமதி செய்வதை கண்காணித்து, வணி கர்களை தவிர்த்து நுகர்வோரிடம் நேரடியாக பருத்தியை விற்க CCI முடிவு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

சேமிப்பு கிடங்குகள் கட்டுவது உட்பட பருத்தி விலையை நிலையாக வைத்திருக்க ஒன்றிய அரசு சிறப்புத் திட்டங்களைத் தொடங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

பிரதம மந்திரி மித்ரா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மேலும் இரண்டு ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காக்களை உருவாக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஜவுளித்துறை இணை அமைச்சர் பபித்ரா மார்கெரிட்டா எழுத்து பூர்வமாக கூறிய பதில் விவரம் வருமாறு :

பருத்தி விலைகளில் நிலைத்தன்மையைப் பராமரிக்கவும், உலகளாவிய விலை ஏற்ற இறக்கங்களின் தாக்கத்திலிருந்து ஜவுளி அலகுகளைப் பாதுகாக்கவும் ஜவுளி அமைச்சகம் பல நட வடிக்கைகளை எடுத்துள்ளது.

பருத்தி விலைகள் இயற்கையாகவே தேவை விநியோக இயக்கவியல் மற்றும் சர்வதேச சந்தை போக்குகளால் பாதிக்கப்படுகின்றன; எனவே, பருத்தி மதிப்புச் சங்கிலி முழுவதும் பருத்தி விலை தொடர்பான கவலைகளைத் தீர்க்க ஜவுளி ஆலோசனைக் குழு மூலம் சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களுடனும் ஜவுளி அமைச்சகம் தொடர்ந்து ஈடுபடுகிறது.

மேலும், விலை அழுத்தங்களைக் குறைக்க, ஒன்றிய அரசு பருத்தி இறக்குமதியை தற்போதுள்ள 11% இறக்குமதி வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது, மேலும் இந்த நிவாரணம் 31.12.2025 வரை அமலில் இருக்கும்.

கூடுதலாக, சந்தையில் குறைந்த பட்ச ஆதார விலைகள் வீழ்ச்சியடையும் போது பருத்தி விவசாயிகளைப் பாதுகாக்க ஒன்றிய அரசு ஆண்டுதோறும் குறைந்தபட்ச ஆதரவு விலைகளை (MSP) அறிவிக்கிறது,

மேலும் இந்திய பருத்தி கழகம் (CCI), MSP கொள்முதலை மேற்கொள்ளும் போதெல்லாம், அதன் பங்குகளை ஒரு சுயாதீனமான ஆன்லைன் மின் ஏல தளம் மூலம் தினமும் விற்பனை செய்கிறது, இது வெளிப்படையான விலை நிர்ணயத்தை உறுதி செய்கிறது மற்றும் ஜவுளித் துறை குறைந்த விலையில் பருத்தியை அணுக உதவுகிறது.

இந்திய பருத்தி கழகம் (CCI) தினசரி ஆன்லைன் மின்ஏலங்கள் வாயிலாக அதன் முழு இருப்பையும் விற்பனை செய்வதன் மூலம் இறுதி பயனர்களுக்கு, முதன்மையாக ஜவுளி ஆலைகளுக்கு நேரடி அணுகலை எளிதாக்குகிறது. குறைந்த பதிவு கட்டணம் மற்றும் வர்த்தகர்களுடன் ஒப்பிடும்போது குறைந்த வருவாய் பண வைப்புத் தேவைகள் போன்ற சாதகமான விதிமுறைகள் மூலம் ஜவுளி ஆலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மேலும், CCI ஒவ்வொரு நாளும் இரண்டு மின்ஏலங்களை நடத்துகிறது, முதல் ஏலம் ஜவுளி ஆலைகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது, வணிகர்களுக்கு விற்பனை செய்வதற்கு முன்பு அவற்றின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்கிறது.

மேலும் பருத்தி உற்பத்தித் திறனுக்கான ஐந்தாண்டு பணி 202526 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது, வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை (DARE) ஒருங்கிணைப்புத் துறையாகவும், ஜவுளி அமைச்சகம் ஒரு ஆதரவு அமைச்சகமாகவும் உள்ளது. பருத்தி உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், நிலைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் தரமான பருத்தியின் நிலையான விநியோகத்தை உறுதி செய்தல் ஆகியவற்றில் இந்த செயல் நோக்குத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

மேலும், முழு ஜவுளி மதிப்புச் சங்கிலிக்கும் ஒருங்கிணைந்த, உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை வழங்கு வதற்காக, தமிழ்நாட்டின் விருதுநகரில் உள்ள ஒன்று உட்பட, நாடு முழுவதும் ஏழு PM மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை (PM MITRA) பூங்காக்களை நிறுவுவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. PM MITRA திட்டத்தின் கீழ் மேலும் பூங்காக்களை நிறுவுவதற்கான எந்த திட்டமும் தற்போது ஒன்றிய அரசின் பரிசீலனையில் இல்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### தமிழ்நாட்டில் சீரான உர விநியோகம்-

# இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!



புதுடெல்லி, டிச.4-

தமிழ்நாட்டில் சரியான நேரத்தில், சீரான உர விநியோகம் நடக்கவும், உரவிலையைக்குறைக்கவும், இயற்கை உரபயன்பாட்டைஊக்குவிக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., கனிமொழிஎன்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் அனுப்ரியா பட்டேல் அளித்த பதில் வருமாறு:

ஒவ்வொரு அறுவடை காலம் தொடங்கும் முன்பாக தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநில அரசுகளையும்தொடர்புகொண்டு மாத வாரியாகஉரத்தேவைகள் என்ன என்பதை கணக்கெடுக்கிறது ஒன்றியவேளாண் அமைச்சகம்.

அந்தக் கணக்கெடுப்பின்படி ஒவ்வொருமாதமும் தேவையான உரங்கள் அனைத்து மாநிலங்களுக்கும் விநியோகம் ஆவதைஉரத்துறை அதிகாரிகள் உறுதி செய்கிறார்கள். இதுதவிர, ஒருங்கிணைந்த உரக் கண்காணிப்பு என்ற இணையதளபோர்ட்டல் மூலமாக சலுகை விலையில் வழங்கப்படும் உரங்களின் விநியோகம் நாடு முழுவதும் கண்காணிக்கப்படுகிறது.

அத்துடன், தங்கள் மாநிலங்களுக்குத் தேவையான உரங்களின் அளவு மற்றும் வகைகள் அடங்கிய பட்டியலை உரிய நேரத்தில் உரத் தயாரிப்புநிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து தொடர்ச்சியான தொடர்பில் இருக்கும்படி மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் வேளாண் துறை அதிகாரிகளுடன் மத்திய உரத்துறை அதிகாரிகள் வாரம்தோறும்வீடியோ கான்பரன்ஸ் வழியாக ஆலோசனக்கூட்டங்கள் நடத்தியும் உரவிநியோகத்தை கண்காணிக்கிறார்கள். குறைகள் இருந்தால் அந்தக் கூட்டங்கள் வாயிலாக அவை நிவர்த்தி செய்யப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகும் யூரியா உள்ளிட்ட உரங்களின் தேவை உற்பத்தியைவிட அதிகமாக இருந்தால், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சரியான நேரத்தில் இந்த உரங்கள் கிடைக்கும் வகையில் உரிய காலத்தில் இறக்குமதி ஆர்டர்கள் செய்யப்படுகின்றன.

இப்படி மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் உரங்கள் மாவட்ட வாரியாக விநியோகம் ஆவதை மாநில அரசுகள் கண்காணிக்கின்றன.

உரமானியத்தைப் பொறுத்தவரை,45 கிலோ யூரியா பை 242 ரூபாய்க்கு விவசாயிகளின் பண்ணைக்கே போய் விநியோகம் செய்யப்படுகிறது. உற்பத்தி விலைக்கும். விவசாய நிலத்துக்கே போய் விநியோகிக்கும்வரையிலானசெலவுக்கும்இடையே உள்ள வித்தியாசத்தை தொகையை உர உற்பத்தி நிறுவனங்களுக்கும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் மத்திய அரசு மானியமாக வழங்கி, நாடு முழுவதும் ஒரே சீரான விலையில் விவசாயி களுக்குயூரியா கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இதுதவிர. பொட்டாசியம் மற்றும் பாஸ்பேட்ரகஉரங்களுக்கு நிலையான மானியத்தொகையையும் மத்திய அரசு வழங்கி வருகிறது.

அதேபோல 50 கிலோ டிஏபிஉரப் பை 1350 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த சலுகை விலையை உறுதி செய்ய உர உற்பத்தி நிறுவனங்களுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு 3500 ரூபாயை மத்திய அரசு வழங்குகிறது.

இயற்கை உரப்பயன்பாட்டை ஊக்குவிக்க பரம்பரகத்கிருஷிவிகாஸ்யோஜனா என்ற பெயரில் வடகிழக்கு மாநிலங்களைத் தவிர நாட்டின் பிற பகுதிகளில் தனியாக ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இயற்கை விவசாயத்தை செய்ய விரும்பும்விவசாயிகளுக்கு, விதைப்பு காலம் முதல் அறுவடை காலம் முடிந்து விற்பனை செய்வது வரை அனைத்து நிலைகளிலும்மாநில அரசுகள் வழியாக உதவும் வகையில் இத்திட்டம்வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இயற்கை விவசாயம் செய்ய விரும்பும்விவசாயிகளுக்கு மூன்றாண்டுகளுக்கென ஒரு ஹெக்டேருக்கு 31,500 ரூபாய் உதவித் தொகை அவரவர் வங்கிக்கணக்குகளுக்கேஅனுப்பப்படுகிறது.

நாடு முழுவதும் இதுவரை 16.90 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் இயற்கை விவசாயம் செய்வதற்கு இத்திட்டம்உதவியிருக்கிறது. இதன்மூலம் 28.24 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். கடந்த பத்தாண்டுகளில்இத்திட்டத்திற்கென 2535 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த வரை, பரம்பரகத்கிருஷிவிகாஸ்யோஜனா திட்டம் மூலம் இதுவரை 32,940 ஹெக்டேர் நிலத்தில் இயற்கை விவசாயம் செய்யப்பட்டு, 37,886 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தமிழ்நாட்டுக்கு இத்திட்டத்திற்கென இதுவரை 6236 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அனுப்ரியாபட்டேல் பதிலளித்தார்.

### திருவண்ணாமலை மாவட்டம்

# மேல் செங்கத்தில் மூலிகை பூங்கா அமைத்திட நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கோரிக்கை!



புதுடெல்லி, டிச.4-

திருவண்ணாமலை மாவட்டம் மேல் செங்கம் வனப்பகுதியில் காலியாக உள்ள இடத்தில் மூலிகை மற்றும் சூழல் பூங்கா அமைத்திட ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கோரிக்கை விடுத்தார்

மக்களவையில் தனிநபர் தீர்மானத்தின் கீழ் அவர் இது தொடர்பாக வலியுறுத்தி பேசியதாவது :-

திருவண்ணாமலை மாவட்டம் மேல் செங்கம் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான ஏறத்தாழ 10000 ஏக்கர் இடம் காலியாக உள்ளது அந்த இடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக எந்தவித வேளாண் நடவடிக்கைகளோ அல்லது தோட்டக்கலை நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை அந்த இடத்தில் மூலிகை பூங்கா மற்றும் சூழல் பூங்கா அமைக்க ஒன்றிய அரசு உடனடியாக முன்வர வேண்டும்

அவ்வாறு அந்த இடத்தில் மூலிகை பூங்கா அமைக்கப்படுமேயானால் அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகள் கிடைக்கும் அந்த இடத்தில் பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்பது வெகு நாட்களாக அப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையாகும் இது தொடர்பாக பலமுறை இந்த அவையிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு மிகப் பெரிய அளவில் இத்தகைய பூங்கா அமைக்கப்படுமேயானால் பல்வேறு தாவர இனங்களும் உயிர் வாழ் இனங்களும் பலனடைய வாய்ப்பு உண்டு

அந்த இடத்தில் ஏற்கனவே வலியுறுத்தபடி இந்த மூலிகை பூங்கா அமைக்கப்படுமேயானால் மேலும் பல்வேறு வசதிகளுக்கு வாய்ப்பு இருக்கும். குறிப்பாக வேளாண் தொடர்பான நடவடிக்கைகள் பழங்குடியினரின் நலத்திட்டங்கள் சுற்றுச்சூழல் அமைப்புகள் அங்கே உருவாக வாய்ப்பு உண்டு அது மட்டுமின்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான ஒன்றிய அரசின் பல்வேறு நடவடிக்கைகளும் திட்டங்களும் உருவாக வாய்ப்பு உண்டு அதன் காரணமாக அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் அவர்களின் பொருளாதார நிலையும் உயரும்

அத்துடன் மூலிகை தாவரங்கள் பயிரிடவும் அது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளவும் மலைவாழ் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதோடு அவர்களின் பொருளாதார வாய்ப்பு மென்மேலும் அதிகரிக்கும்.

எனவே திருவண்ணாமலை மாவட்டம் மேல் செங்கத்தில் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருக்கும் வனத்துறைக்கு சொந்தமான சுமார் 10,000 ஏக்கரில் மூலிகை தோட்டம் மற்றும் சூழல் இயல் தோட்டம் அமைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து மலைவாழ் மக்கள் வாழ்வில் மேம்பாட்டிற்கு உதவிடுமாறு இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன் ஒன்றிய அரசும் விரைந்து செயல்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கோரிக்கை விடுத்தார்.



துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு , திருப்பத்தூர் நகர கழகம் (ம) நகர இளைஞரணி சார்பில் , பாச்சலில் உள்ள SRDPS மறுவாழ்வு மையத்தில் செயலாளர் சு.ராசேந்திரன் தலைமையில் நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவும் வழங்கப்பட்டது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி. வடிவேல் நகர இளைஞரணி அமைப்பாளர் டி.எஸ்.மாதேஸ்வரன் ஏற்பாட்டில் ஆர்.அரவிந்த்குமார் கொள்கைபரப்பு துணை செயலாளர் தொகுதி பார்வையாளர் வேலூர்.ஜி.ரமேஷ் , டி.பி.ரமேஷ் , டி.எஸ்.தமிழ்மணி , க.நதீம் அகமத் , பி.நாகு , நகர அணிகளின் அமைப்பாளர்கள் (ம) துணை அமைப்பாளர்கள் தினா, பைரோஸ் ,வினாயகம், கார்த்திக் முனி , சக்தி ,ரசாக் ,ராகுல் ,ஸ்டாலின் ,சாதிக் , விக்னேஷ் , சங்கர் , ராக்கி மற்றும் கழக நிர்வாகிகள் , தோழர்கள் , SRDPS அறங்காவலர்கள் , பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் கட்டணமின்றி

# நிரந்தர உறுப்பினர் சேர்க்கை கால அவகாசம் நீட்டிப்பு!

சென்னை, டிச. 4-

தமிழ்நாடு வணிகர் நல வாரியம் வணிகர் பெருமக்களின் நலனுக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக 1989ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இன்று வரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற / பதிவு பெறாத வணிகர்களின் உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை 1,13,118 ஆகும் மற்றும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் வாயிலாக, சிறு மற்றும் குறு வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சரக்குகள் சேவைகள் வரிச் (GST) சட்டத்தில் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத வணிகர்கள் வருடத்திற்கு “விற்று முதல் அளவு” (Turn Over) ரூ.40 இலட்சம் வரை வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு வாரியத்தின் உறுப்பினராவதற்கான கட்டணத்பலனை பெறும் வகையில்தொகையான ரூ.500/ஐ செலுத்துவதிலிருந்து 01.12.2025 முதல் 31.03.2026 வரையிலான நான்கு மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்படுகிறது என்று வணிக வரித்துறை ஆணையர் எஸ். நாகராஜன் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒன்றியம், புகைப்பட்டி கிராமத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் புதிய நியாய விலைக் கடையை ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, திறந்து வைத்து பொதுமக்களுக்கு அரிசி பருப்பு, சர்க்கரை, பாமாயில் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார், இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் ப.ராஜவேல், துணைத் தலைவர் அலெக்ஸாண்டர், மாவட்ட வழங்கல் அலுவலர் முத்தையன், பானு, வட்ட வழங்க அலுவலர் சிங்காரவேல், ஒன்றியதுணைச்செயலாளர் எஸ்.ரமேஷ், கிளைக்கழக செயலாளர் தண்டபாணி, நகர மன்ற உறுப்பினர் செல்வகுமாரி ரமேஷ்பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.